بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/02/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த வழிகாட்டல்களின் ஒளியில் திருக்குர்ஆனுடைய அருள்கள், அந்தஸ்து, தகுதி மற்றும் மகத்துவம் குறித்து எடுத்துரைத்தல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۞ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۞ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۞ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۞ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۞

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் அருள்களைக் குறித்து எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** "இதன் நன்மைகள் மற்றும் அருள்களின் வாசல் எப்பொழுதும் திறந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தது போன்றே எல்லாக் காலங்களிலும் அவ்வாறே அது தெளிவானதாகவும், ஒளிமிக்கதாகவும் உள்ளது."

பிறகு, **ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** பெரும்பாலான முஸ்லிம்கள் திருக்குர்ஆனை விட்டு விட்டார்கள் என்பது உண்மையே! ஆயினும், திருக்குர்ஆனின் ஒளிகளும், அருள்களும், அதன் தாக்கங்களும் எப்பொழுதும் உயிருடனும் புத்தம் புதிதாகவும் உள்ளன. ஆகவே, இக்காலத்தில் இந்தச் சான்றுக்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும், அல்லாஹ் எப்பொழுதும் அதற்குரிய காலத்தில் தன் ஆதரவு மற்றும் உதவி (ஆகியவற்றை வழங்குவதற்) -காக தன் அடியார்களை அனுப்பி வந்துள்ளான். ஏனெனில், اِنَّا نَحۡنُ نَزَّلۡنَا الذِّکۡرَ وَ اِنَّا لَہٗ لَحٰفِظُوۡنَ 'நாம் இந்த திக்ரை, அதாவது, திருக்குர்ஆனை இறக்கினோம். நாமே இதை பாதுகாப்பவனாக இருக்கின்றோம்' என அவன் வாக்குறுதி தந்துள்ளான்."

ஆகவே, இக்காலத்தில் திருக்குர்ஆனைப் பரப்புவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரை அல்லாஹ் அனுப்பியுள்ளான். மக்களிடமிருந்து மறைவாக இருந்த அந்த ஞானங்களை அன்னாருக்கு அல்லாஹ் கற்றுக் கொடுத்துள்ளான். திருக்குர்ஆனின் ஆட்சியை உலகில் நிலைநாட்டவே அன்னார் வந்துள்ளார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பெயர் அளவிலான ஆலிம்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாதத்தின் ஆரம்பம் முதலேயே அன்னாரை எதிர்ப்பதைத் தம் வழக்கமாக ஆக்கிக் கொண்டுள்ளனர். மேலும், எவ்வித அறிவுப்பூர்வமான விஷயத்தைக் கேட்கவும் விரும்புவதில்லை. பொது மக்களையும் வழிகெடுத்து வருகின்றனர். பாக்கிஸ்தானில் அவ்வப்போது இந்த பெயரளவிலான ஆலிம்களின் எதிர்ப்பு எழுவதுண்டு. மலிவாக விளம்பரம் தேடும் சில அரசியல் வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் இவர்களுடன் இணைந்து

விடுகின்றனர். பல்வேறு சாக்குபோக்குகளின் மூலமாக அஹ்மதிகள் அநீதிக்கு இலக்காக்கப்படுகின்றனர். கடந்த சில காலமாக இம்மக்கள், திருக்குர்ஆனை திரித்தல் மற்றும் அவமதித்தல் எனும் பெயரில் புனையப்பட்ட வழக்குகளை அஹ்மதிகள் மீது தொடர முயற்சி செய்து வருகின்றனர். இவர்களின் தீங்கிலிருந்து அல்லாஹ் பாதுகாப்பானாக! மேலும், இந்தத் தவறான, அநீதியான குற்றச்சாட்டில் எந்த அஹ்மதிகளை அவர்கள் (சிறை) பிடித்துள்ளார்களோ அந்த அஹ்மதிகள் விரைவில் விடுதலையாவதற்கான வழிவகையை அல்லாஹ் உருவாக்குவானாக!

இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவே திருக்குர்ஆனின் ஞானத்தை அறிய முடியும். அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் இப்பணியை உலகில் செய்து வருகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் அந்தஸ்து மற்றும் தகுதி ஆகியவை குறித்து தம் வழிகாட்டல்களிலும், நூல்களிலும் எடுத்துரைத்துள்ள ஞானங்கள் பற்றி இன்று நான் எடுத்துக் கூறுவேன்.

**திருக்குர்ஆன் முழுமையான, நிறைவான போதனை ஆகும் என்பதைக் குறித்து ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘குர்ஆன் தன் போதனையில் முழுமையானது ஆகும். எந்த உண்மையும் அதற்கு வெளியில் இல்லை. இதுவே எனது மார்க்கம் ஆகும். ......திருக்குர்ஆனிலிருந்து அனைத்து மார்க்க விவகாரங்களின் தீர்வு மற்றும் முடிவு ஆகியவற்றை எடுப்பதும், இறை நாட்டத்திற்கிணங்க அதன் வாக்கியங்களின் சரியான விபரங்களைப் பெறுவதும் முயற்சி செய்யும் ஒவ்வொருவரின் வேலையோ அல்லது மவ்லவியின் வேலையோ கிடையாது. மாறாக, இறை வஹீயின் மூலமாக நுபுவ்வத் அல்லது மகத்துவமிக்க இறைநேசராக உதவி செய்யப்பட்டவர்களின் குறிப்பான பணியாகும் இது.’’

**நேர்வழிக்கு முதல் வழிமுறை திருக்குர்ஆன் ஆகும் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘எனது மார்க்கம் என்னவென்றால், உங்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக இறைவன் மூன்று விஷயங்களை உங்களுக்கு வழங்கியுள்ளான். அனைத்தையும் விட முதன்மையானது, திருக்குர்ஆன் ஆகும். இதில், இறைவனுடைய ஏகத்துவம் குறித்தும், கம்பீரம் குறித்தும், மகத்துவம் குறித்தும் கூறப்பட்டுள்ளது. இதில், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கிடையில் காணப்படும் கருத்து வேறுபாடுகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. .....இறைவனைத்தவிர யாரையும் வணங்கக்கூடாது எனத் திருக்குர்ஆனில் தடை செய்து விட்டான். .....ஆகவே, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்! இறைவனது போதனைக்கும், திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கும் மாற்றமாக ஓர் அடி கூட எடுத்து வைக்காதீர்கள்! எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையைக் கூட தவிர்ப்பாரோ அவர் இரட்சிப்பின் கதவைத் தம் கைகளால் தம் மீது அடைத்துக் கொள்கிறார் என நான் உங்களுக்கு உண்மையாகவே கூறிக்கொள்கிறேன்! .....இறைவன் என்னை நோக்கி (இறை அறிவிப்பின் மூலமாக) اَلْخَيْرُ كُلُّهٗ فِى الْقُرْاٰن எனக் கூறியுள்ளான். அதாவது, ‘எல்லாவித நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளன.’ இதுவே உண்மையாகும்!’’

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘உங்களுக்கு வேதமாக திருக்குர்ஆனை அருளியிருப்பதன் மூலமாக உங்கள் மீது இறைவன் பெரும் கருணை புரிந்துள்ளான். .....ஆகவே, உங்களுக்கு வழங்கப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள்! இது மிகவும் அன்பார்ந்த போதனையும், பெரும் செல்வமும் ஆகும். திருக்குர்ஆன் வந்திருக்காவிட்டால், முழு உலகும் அசுத்தமான இரத்தக் கட்டியாக இருந்திருக்கும். திருக்குர்ஆன் எவ்வாறான வேதம் என்றால், அதன் முன் அனைத்து வழிகாட்டல்களும் அற்பமானவையாகும்.’’

**திருக்குர்ஆன் காத்தமுல் குதுப் ஆக உள்ளது என்பதைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் (நபிமார்களுக்கெல்லாம் முத்திரை) ஆவார்கள். திருக்குர்ஆன் காத்தமுல் குதுப் (வேதங்களுக்கெல்லாம் முத்திரை) ஆகும். இப்பொழுது வேறு ஏதேனும் கலிமாவோ அல்லது வேறு ஏதேனும் தொழுகையோ இருக்க முடியாது! எவற்றையெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்களோ அல்லது செய்து காட்டினார்களோ அவற்றை விட்டு விடுவதால் இரட்சிப்பு கிடைக்க முடியாது. எவர் அதை விட்டு விடுவாரோ அவர் நரகத்திற்குள் செல்வார். இது நமது மார்க்கமும், கொள்கையும் ஆகும்! ஆனால் அத்துடன், இந்த உம்மத்துக்கு (இறைவனுடன்) உரையாடும், சம்பாஷனை செய்யும் கதவு திறந்துள்ளது என்பதையும் நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்தக் கதவு, திருக்குர்ஆனின் உண்மைக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கும் புத்தம் புதிய சான்றாக எப்போதும் உள்ளது.’’

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘இஸ்லாத்தின் குறிக்கோள்களில் இருந்த விஷயம் என்னவென்றால், மனிதன் நாவளவில் மட்டும் ‘வஹ்தஹூ லா ஷரீக்’ (இறைவன் ஒருவனே. அவனுக்கு இணையில்லை) என்று கூறாமல், உண்மையாகவே புரிந்து கொள்ளட்டும். சொர்க்கத்தின் மீதும் நரகத்தின் மீதும் கருத்தளவில் மட்டும் நம்பிக்கை கொள்ளாமல், உண்மையிலேயே இதே வாழ்வில் அவர் சொர்க்கத்தின் நிலைகளை அறிந்து கொள்ளட்டும்! மிருகமாய் மாறிப்போன மனிதர்கள் மூழ்கியுள்ள அந்தப் பாவங்களை விட்டு இரட்சிப்பு கிடைக்க வேண்டும். இந்த மாபெரும் நோக்கம் இஸ்லாத்தினுடையதாக இருந்தது; இருக்கிறது. இது எவ்வாறான தூய, பரிசுத்த நோக்கம் என்றால், வேறு எந்த சமுதாயமும் இதற்கு நிகரானதைத் தன் மார்க்கத்திலிருந்து எடுத்து வைக்க இயலாது!’’

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் இன்று இந்தத் தரத்தை அடைய வேண்டிய தேவை உள்ளது. அஹ்மதிகள் பழைய கதைகளை மட்டும் எடுத்துக் கூறுபவர்கள் கிடையாது. மாறாக, இன்றும் கூட உயிருள்ள வேதம், உயிருள்ள தூதர் மீது நம்பிக்கை கொள்பவர்களின் மீது அல்லாஹ்வின் அருள்கள் இறங்குகின்றன என்றும், இன்றும் அல்லாஹ் பேசுகின்றான் என்றும் நம்பிக்கை கொள்ளக் கூடியவர்கள் அஹ்மதிகள் ஆவர் என்றும் உலகிற்குக் கூற வேண்டிய தேவை உள்ளது. மேலும், நம்மீது குர்ஃப் உடைய மார்க்கத் தீர்ப்பு வழங்குபவர்களுக்கு (நிரூபித்து) காட்ட வேண்டிய தேவை உள்ளது.

**பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''நமக்கு அல்லாஹ் எவ்வாறான நபி தந்துள்ளான் என்றால், அவர்கள் காத்தமுல் முஃமினீன் (நம்பிக்கையாளர்களுக்கெல்லாம் முத்திரை) ஆகவும், காத்தமுல் ஆரிஃபீன் (இறை ஞானம் பெற்றவர்களுக்கெல்லாம் முத்திரை) ஆகவும், காத்தமுன் நபிய்யீன் (நபிமார்களுக்கெல்லாம் முத்திரை) ஆகவும் உள்ளார்கள். அவ்வாறே, அவர்கள் மீது எவ்வாறான வேதம் இறக்கப்பட்டுள்ளது என்றால், அது ஜாமிவுல் குதுப் (அனைத்து வேதங்களையும் உள்ளடக்கியது) ஆகவும், காத்தமுல் குதுப் (அனைத்து வேதங்களுக்கும் முத்திரை) ஆகவும் உள்ளது.''

**திருக்குர்ஆனின் மீது நம்பிக்கை கொள்வது எந்த அளவுக்கு அவசியம் ஆகும் என்பது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு கொஞ்சம் கூட இங்கும் அங்கும் செல்வதை நான் ஈமானற்றதாக கருதுகிறேன். என்னுடைய கொள்கை என்னவென்றால், எவர் இதை சிறிதளவு கூட விட்டு விடுவாரோ அவர் நரகவாசியாவார்.''

**திருக்குர்ஆன் மற்றும் இயற்கைச் சட்டம் ஆகியவற்றிற்கு உள்ள பொருத்தம் குறித்து விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''தூய, முழுமையான போதனை திருக்குர்ஆனின் போதனையாகும். அது மனித(ன் எனும்) மரத்தின் ஒவ்வொரு கிளைகளையும் வளர்க்கிறது. திருக்குர்ஆன் ஏதாவது ஓர் அம்சத்தின் மீது மட்டும் அழுத்தம் கொடுப்பதில்லை. மாறாக, அது மன்னித்தலையும், கண்டும் காணாமல் இருத்தலையும் போதிக்கின்றது. ஆனால், பொருத்தமான தருணமாக இருப்பது மன்னிப்பதற்கான நிபந்தனையாகும் என்று கூறுகிறது. அவ்வாறே, இடம், காலம் அறிந்து குற்றவாளியை தண்டிக்கவும் கூறுகிறது. ஆகவே, திருக்குர்ஆன் என்பது நம் கண் முன்னால் எப்பொழுதும் தென்படுகின்ற இறைவனுடைய இயற்கைச் சட்டத்தின் வரைபடமாகும். இறைவனின் சொல்லிலும் செயலிலும் ஒற்றுமை காணப்பட வேண்டும் என்பது மிகவும் அறிவுப்பூர்வமான விஷயமாகும். அதாவது, எந்த வகையில் எந்த வழிமுறையில் இறைவனின் செயல் உலகில் தென்படுகிறதோ அதேபோன்று இறைவனின் உண்மையான வேத நூலும் தன் செயல்முறைக்கேற்ப போதிக்க வேண்டியது அவசியமாகும்.''

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''உண்மையான மார்க்கம் எதுவென்றால், அது, இக்காலத்திலும் இறைவன் கேட்பதையும், பேசுவதையும் - இரண்டையும் நிரூபிக்க வேண்டும். சுருக்கமாக, உண்மையான மார்க்கத்தில் இறைவன் தன் உரையாடல் மற்றும் சம்பாஷனை மூலமாக தன் இருப்பு பற்றி செய்தி அறிவிக்கின்றான். இறைவனை அடையாளம் காண்பது மிகவும் கடினமான பணியாகும். இறைவனை அடையாளம் காட்டுவது உலகில் உள்ள அறிவாளிகள் மற்றும் தத்துவவாதிகளின் பணியல்ல! ஏனென்றால், பூமி மற்றும் வானங்களைப் பார்த்து, இந்த நுட்பமான தொகுப்பைப் படைத்தவன் யாராவது இருக்க வேண்டும் என்பதே நிரூபணமாகிறது. அந்தப் படைப்பாளி உண்மையாகவே இருக்கிறான் என்பது அதில் நிரூபணமாவதில்லை! (இறைவன்) இருக்க வேண்டும் என்பதிலும், இருக்கிறான் என்பதிலும் உள்ள வேறுபாடு

வெளிப்படையானதே! ஆகவே, அந்த இருப்பைக் குறித்து நிச்சய முகவரி அளிக்கக் கூடியது திருக்குர்ஆன் மட்டுமே!''

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''நம் எதிரே வந்து தம் உண்மைக்கு அடையாளத்தைக் காட்டட்டும் என்று ஒவ்வொரு சமுதாயம் மற்றும் ஒவ்வொரு மார்க்கத்தின் தலைவர்களுக்கும் நாம் அழைப்பு கொடுத்தோம். ஆனால், தன் மார்க்கத்தின் உண்மைக்கு ஏதேனும் செயல் ரீதியான முன்மாதிரியைக் காட்டுபவர் ஒருவர் கூட இல்லை! இறை வேதத்தை நாம் முழுமையான அற்புதம் ஆக கருதுகிறோம். வேறெந்த வேதமும் இதற்குப் போட்டியாக இல்லை என்பது நம்முடைய நம்பிக்கையும், வாதமும் ஆகும்.''

*ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில், தவ்ராத், இஞ்சீல் ஆகியவற்றின் போதனைகளுக்கெதிரே திருக்குர்ஆனின் போதனை முழுமையானது, தத்துவ ரீதியானது என்று நிரூபித்த பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* துணிவு மற்றும் சான்றுகளுடன் அனைத்து மார்க்கங்களின் மீதும் திருக்குர்ஆனின் மேன்மையை நிரூபிப்பது எப்படிப்பட்ட காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பணியாக இருந்தது என்றால், அப்போது அந்த நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சி இருந்தது. Church (தேவாலயம்) உடைய ஆதிக்கம் இருந்தது. அவ்வாறிருந்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் மேன்மை குறித்து பகிரங்கமாக சவால் விடுத்தார்கள். எவ்வித அச்சத்தையும் நெருங்க விடவில்லை. ஏனெனில், அன்னார் இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஊழியராக அல்லாஹ்வால் அனுப்பப்பட்டிருந்தார்கள். இவ்விஷயத்தைத்தான் நாம் அன்னாருடைய போதனைகளிலும், நூல்களிலும் காண்கின்றோம். இதே போதனையைத்தான் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் முன்னெடுத்து பரப்புகிறது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது குற்றச்சாட்டு சுமத்துபவர்கள் அஹ்மதிகளைக் குறித்து கூறும்போது, அஹ்மதிகள் திருக்குர்ஆனைத் திரித்து, அவமதிப்பு செய்து வருகிறார்கள் என்று கூறுகிறார்கள்.

**திருக்குர்ஆனின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''திருக்குர்ஆனுடைய கண்ணோட்டம் முழு உலகின் சீர்திருத்தம் ஆகும். எந்தவொரு குறிப்பிட்ட சமுதாயத்தையும் விளித்து அது பேசவில்லை! அனைத்து மனிதர்களுக்காகவும் இறங்கியுள்ளது என்றும், ஒவ்வொருவரின் சீர்திருத்தமும் அதன் குறிக்கோள் ஆகும் என்றும் பகிரங்கமாக அது கூறுகிறது.''

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* திருக்குர்ஆனின் அருள்கள், அந்தஸ்து, தகுதி மற்றும் மேன்மை ஆகியவை தொடர்பாக இன்னும் பல சான்றுகள் உள்ளன. அவை எப்பொழுதாவது எடுத்துரைக்கப்படும்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)